# JAMAAT UL SAHIH AL ISLAM – TAMIL NADU




## ஈதுல் அத்ஹா பேருரை

**தலைப்பு :** ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் பிரார்த்தனை

**12 August 2019**

**(10 MUHARRAM 1440 AH )**

ஹஸ்ரத் முஹையுதின் அல் கலீ:.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)

வெளியீடு

அமீர்,

ஜமா அத் தமிழ்நாடு

**Phone No :- 917502272774**



# THE PRAYER OF HAZRAT IBRAHIM (AS)

## ஹஸ்ரத் இப்றாஹீம் (அலை) அவர்களின் பிரார்த்தனை

உலகெங்கிலும் உள்ள தனது தோழர்களுக்கும் மற்றும் எல்லா முஸ்லீம்களுக்கும் ஸலாத்தினைத் தெரிவித்தபிறகு, தஷஹுத், தவ்வூத் மற்றும் சூறா∴பாத்திஹா ஓதியபிறகு **ஹஸ்ரத் கலீ∵பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் ஈதுல் அத்ஹா பேருரையியை நிகழ்த்தினார்கள்.

رَبِّ هَبْ لِى مِنَ ٱلصَّٰلِحِينَ ۝ فَبَشَّرْنَٰهُ بِغُلَٰمٍ حَلِيمٍ ۝

**“என் இறைவா! நீ எனக்கு நல்ல சந்ததியைத் தந்தருள்வாயயாக (என்று அவர் வேண்டினார்) எனவே பொறுமை மிக்க ஒரு மகனைப் பற்றிய நற்செய்தியினை நாம் அவருக்கு வழங்கினோம்”**

இன்று நான் உங்களுக்கு முன் ஓதிய இப்பிரார்தனையானது திருக்குர் - ஆனில் 37 –ஆம் அத்தியாயத்தில் 101, 102 வசனங்களில் காணப்படுகின்றன. இது ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் அல்லாஹ்விடம் கேட்ட ஒரு தூஆ ஆகும்.

அத்துஆ பின்வருமாறாகும் **“ரப்பி ஹப்லி மினஸ்சாலிஹின் (என் இறைவா! நீ எனக்கு ஸாலிஹான ஒரு நன்மகனைத் தந்தருள்வாயாக) ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் இத்துவாவை அல்லாஹ்விடம் சமர்பித்த பின்னர் எல்லாம் வல்ல அல்லாஹ் அதை ஏற்றுக் கொண்டு அவருக்கு கீழ்வருமாறு நற்செய்தியை வழங்கினான் ∴பஷ்ஷிர் நாஹு பிகுலாமின் (நாம் அவருக்கு பொறுமை மிக்க ஒரு மகனைக் கொண்டு நன்மாராயம் கூறினோம்.)**

ஆகவே ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் துஆவை ஏற்றுக் கொள்வதைக் குறித்தும், ஒரு மென்மையான, சகிப்புதன்மைமிக்க ஒரு மகனின் பிறப்பை பற்றி அல்லாஹ் வழங்கிய வாக்குறுதி எவ்வாறு நிறைவேறியது என்பதை குறித்தும் இந்த வசனங்கள் தெளிவாக காட்டுகிறது. அக்குழந்தை தனது தந்தையுடன் வேகமாக பயணம் செய்வதற்குரிய வயதையடைந்த போது தந்தையவர் தனது மகனிடம் கூறினார். **“என்னருமை மகனே! நான் உன்னை அறுப்பதைப் போன்று ஒரு கனவில் கண்டேன்” எனவே அதனைப் பற்றி உன் கருத்து என்ன?** அதற்கு அவரது மகன் கூறினான் **“என் தந்தையே! உமக்குக் கட்டளையிடப்பட்டவாறு நீர் செய்வீராக இறைவன் நாடினால், நீர் என்னை நிலைத்திருப்பவனாகவே காண்பீர்.”**

இந்த வசனத்தில் அல்லாஹ் பொறுமையைக் குறிப்பிட்டுள்ளான். உறுதியுடன் நிலைத்திருப்பவர்களைக் குறித்து நினைவூட்டுகின்றான். ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் மகன், உயிர் தியாகம் செய்ய வேண்டிய நேரம் வந்தபோது காட்டிய அதே பொறுமைதான். அதனால்தான் அக்குழந்தை அதாவது ஹஸ்ரத் இஸ்மாயில் (அலை) அவர்கள் சொன்னார்கள் இன்ஷா அல்லாஹ் **நீங்கள் என்னை நிலைத்திருப்பவனாகவே காண்பீர்.**

எனவே அல்லாஹ்வின் பதையில் உயிர்தியாகம் என்னும் காரியம் பொறுமையுடன் மிக ஆழமான தொடர்பை கொண்டுள்ளது. பொறுமை இல்லாவிட்டால் உயிர்ப்பலியிடு என்னும் தியாகம்தான் வீணானது. ஹஸ்ரத் இஸ்மாயில் (அலை) அவர்கள் அன்றைய தினம் முழுமை பெற்ற மற்றும் முற்றிலும் நேர்மையான தனது கருத்தை சொல்லாமல் இருந்திருந்தால், அதாவது அல்லாஹ் நாடினால், நீர் என்னை நிலைத்திருப்பவனாகவே காண்பீர் என்று கூறாமலிருந்திருந்தால் அன்றைய தினமே தியாகத்தின் உண்மையான அர்த்தம் இழந்துப்போயிருக்கும். அதன் விளைவாக தியாகத்தின் யதார்த்தமான பொருள் உலகிலிருந்து பறிக்கப்பட்டிருக்கும்.

இதே விஷயம்தான் அதாவது பொறுமையைக் குறித்துதான் தொடர்ச்சியான வசனங்களில் தெளிவுபடுத்தப்பட்டிருகிறது. இதே பெறுமைதான், ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் காலகட்டத்தில் அனைத்துவிதமான மகிழ்ச்சிக்கும் காரணமாக அமைந்தது. அத்தகைய ஒரு பொறுமை, அத்தகைய ஒரு முன்மாதிரி வேறு எந்த காலத்திலும் குறிப்பாக வேறு எந்த நபிமார்களின்

காலகட்டத்திலும் வெளிபடவில்லை. அந்த காலகட்டத்திற்கும், பிற காலகட்டத்திற்கும் உள்ள வித்தியாசம் என்னவென்றால் அல்லாஹ், ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் உள்ளத்தை நோக்கும் போது அவரது தியாகத்தின் உணர்வை கண்டு கொண்டான். எனவேதான் சொந்த மகனை பலியிடுவதிலிருந்து அல்லாஹ் அவரை காப்பற்றினான். எனவே சூரா : அஸ்ஸா.ஃப்.ஃபாதில் (37 :104 – 106) அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான். **அவ்விருவரும் (இறைவனது விருப்பத்திற்கு) கீழ்படிந்து, அவர் அவனை முகங்குப்புறக் கிடத்திய போது, நாம் அவரை இப்ராஹீமே! என அழைத்தோம். நிச்சயமாக நீர் அக்கனவை நிறைவேற்றிவிட்டீர், நிச்சயமாக நாம், நன்மை செய்பவர்களுக்கு இவ்வாறே நற்பலன் வழங்குகிறோம் என்று கூறினோம்.**

இந்த வசனங்களை நீங்கள் படித்து பகுப்பாய்வு செய்யும் பொழுது, உங்களுக்கு ஒரு காரியம் உணர முடியும் அதாவது இவ்வசனத்தின் பொருளானது, எதிர்காலத்திலும் இது போன்ற பிள்ளைகள் இருப்பார்கள் என்றும் அவர்கள் அல்லாஹ்வின் வழியில் தங்களை பலியிடுவதற்காக முகங்குப்புறக் கிடக்கும் காலம் வரும் என்றும் புரிந்துகொள்ளலாம். ஆனால் அச்சூழ்நிலையில் அவர்களை பலியிடுவது அதாவது அவர்களை படுகொலை செய்வது அவர்களின் பெற்றோர்கள் அல்ல, மாறாக மற்றவர்கள் அவர்களை கொன்று விடுவார்கள். அது எவ்வாறுயெனில், இந்த பிள்ளைகளுக்கு எதிராக புறக்கணிப்பை ஏற்படுத்துவார்கள், துன்புறுத்துவார்கள், சிரமங்களை உருவாக்குவார்கள். உண்மையில் இத்தகைய செயலானது அவர்களின் கழுத்தை அறுப்பதற்கு சமமாகும். அந்நிலையில் இக்குழந்தைகள் மிகுந்த பொறுமையை வெளிப்படுத்துவார்கள். மேலும் நாங்கள் ஹஸ்ரத் இஸ்மாயீல் நபி (அலை) அவர்களின் உண்மையான ஆன்மீக சந்ததியினர் என்பதை நிரூபிப்பார்கள். ஹஸ்ரத் இப்ராஹீம் நபி (அலை) அவர்களின் துவாவின் உண்மையான பயன்பாட்டை அவர்கள் காண்பிப்பார்கள், மேலும் இஸ்மாயீல் நபி (அலை) அவர்களின் அசாதாரணமான தியாகத்தையும், அதே வகையான சிறந்த பதிலையும் அவர்கள் காண்பிப்பார்கள். அந்த சந்தியினரிடையே முழுமைபெற்றவராக அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இருக்கின்றார். ஒருபுறம் பௌதீகமாக அவர் ஹஸ்ரத் இப்ராஹீம் நபி (அலை) மற்றும் ஹஸ்ரத் இஸ்மாயில் நபி (அலை) ஆகியோருடைய சந்ததியினராக இருக்கிறார் ஆனால் மறுபுறம் ஆன்மீக நிலையில் அவர் காத்த முன்னபியீன் என்பதால் ஹஸ்ரத் இஹ்மாயீல் நபி (அலை) அவர்களுக்கு தந்தையாகவும் இருக்கிறார்.

எனவே “ஈதுல் அத்ஹா” வேளையில் இந்த இரத்ததியாகம் (அல்லாஹ்வின் பாதையில் குழந்தைகளை அவர்களின் ஒப்புதலுடன் அர்பணிப்பது) ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் மற்றும் அவரது சமுதாயத்தினரும் தொடர்ந்து வருக்கின்றனர். நீங்கள் விரும்புகின்றீர்களேயானால் உங்கள் குழந்தையை அல்லாஹ்வின் வழியில் தியாகம் செய்யலாம் என்று அல்லாஹ் கூறியுள்ளான். இந்த அனுமதியை நீங்கள் பெறுவது எப்பொழுதென்றால், உங்கள் குழந்தை தன்னை தியாகம் செய்வதற்கு தயாராகி தனகாவே முன்வரும் பொழுதுதான். குழந்தை முற்றிலும் அதற்கு தயாராக இருக்க வேண்டும். மேலும் அக்குழந்தை தனது விருப்பபடி முன்வருவதுடன், பொறுமையையும் காட்ட வேண்டும். ஏனென்றால், சில சமயங்களில் அல்லாஹ்வின் வழியில் தியகங்கள் புரிய அசாதாரணமான பொறுமை அவசியமாகும். எந்தவொரு நாட்டிலானாலும் சரி, ஒரு நம்பிக்கையாளர் அல்லாஹ்வின் வழியில் துன்புறத்தலுக்கு ஆளானால், பிற மக்கள் சிறிய அளவிலாவது அவருக்கு தீங்கிழைத்தால் உலகெங்கிலுமுள்ள முஸ்லீம்களின் முழுவுடலும் அந்த துன்பத்தை/வலியை உணரவேண்டும்.

ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் காலத்தில் அல்லாஹ்வின் பாதையில் நிகழ்ந்த உயிர் தியாகங்களை இப்ராஹீம் நபி அலை அவர்களின் காலத்தில் நிகழ்ந்த உயிர் தியாங்களுடன் ஒப்பிட்டும் பொழுது மிக எளிதானது என நாம் கூறுவது சரியானதல்ல. எந்த விதமான சகோதரத்துவமும் இல்லாத ஒரு சமூகத்தில் தான் இவையனைத்தும் நிகழ்திருந்ததால் ஹஸ்ரத் இஸ்மாயில் (அலை) அவர்களின் தியாகம் இதைவிட உயர்ந்தது என்று நாம் கூறவேண்டியதாகயிருக்கும். ஏனென்றால் அந்த காலகட்டத்தில் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் தனது மகனை எதுவும் இல்லாத ஒரு பாலைவனத்தில் விட்டு விட்டார். ஆனால் இந்த வசனங்களின் மூலம் அல்லாஹ் ஒரு உண்மையை வெளிப்படுத்திக்காட்டுகிறான் அதாவது ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் காலங்களில் பயிர் செய்ய வேண்டிய தியாகங்களுக்கிடையில் இரத்தம் சிந்த வேண்டியிருக்கும் என்பதை அல்லாஹ் வெளிப்படுத்துகிறான். வரும் காலங்களிலும் இந்த தியாகத்தின் தன்மை நிலைநிற்கும் பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது தோழர்களை குறிப்பிட்டு கூறியிருப்பதாக காணலாம். நம்பிக்கைகொண்டோர்களின் ஜமா அத்து ஓரே உடல் போன்றதாகும் ஒரு முள் ஒரு கைவிரலில் குத்தினால்கூட, அதன்

விளைவாக அவ்விரலுக்கு தீங்கு விளைந்தால், அது நகத்தின் சிறுபகுதியிலானாலும் கூட முழுஉடலும் அந்த வலியால் அவதிப்படுகிறது.

இவ்வாறு அதே உணர்வுகளைக் கொண்டவர்கள்தான் நம்பிக்கையாளர்களின் கூட்டம். தங்கள் சகோதர்களின் துன்பங்களுக்கு மிகுந்த வேதனையை உணர்ந்து கொள்பவர்கள்தான் நம்பிக்கையாளர்களின் சங்கம் என்றால், ஒருவர் கொல்லப்படும் பொழுது அது அவர்களை பாதிக்காது என்று எப்படி கூறயியலும்? தனது சகோதரர்களின் வலி அல்லது கொலையில் எந்த கவலையுமடையாமல் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழும் மக்களை நம்பிக்கையாளர்கள் என்று கூறமுடியாது. மற்றொரு வகையில் கூறுவோமேயானால், அத்தகைய மக்களை ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ள நம்பிக்கைகொண்டவர்களின் கூட்டத்தில் உட்படுத்தி எண்ண ஒருபோதும் இயலாது.

ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் ஆன்மீக சந்ததிகளில் விசுவாசிகளின் ஒரு பெரிய சமூகம் இருந்தன. அவர்கள் இஸ்மாயீல் (அலை) அவர்கள் புரிந்தது போன்று அகமும் புறமுமாக தியாகத்தின் உச்சத்திற்கு சென்றடைந்தனர். ஆனால் இத்தியாகங்களுக்கு அவர்கள் தானாகவே முன்வந்தார்கள். நிர்ப்பந்ததிற்கு உள்ளாக்கப்பட்டநிலையிலல்ல. அவர்கள் தங்கள் விருப்படியே முன் வந்தனர். இந்த விஷயத்தை புரிந்து கொள்ளாத மக்கள் பலர் உள்ளனர். சுய விருப்பத்துடனோ அல்லது நிர்ப்பந்தத்துடனோ அல்லாஹ் அழைக்கும்போது, அதற்கு பதிலளிக்கும் மக்கள் உள்ளனர் என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும். உண்மையிலேயே நேர்மையான அத்தகைய மக்கள் இறை அழைப்பிற்கு “நாங்கள் தானாக முன்வந்துள்ளோம்” என பதிலளிக்கின்றனர். அப்படியென்றால், நிர்ப்பந்தத்தின் கீழ் முன்வருவதை அல்லாஹ் ஏன் குறிப்பிட்டான் என இப்போது சிலர் நினைக்கலாம். எல்லா மக்களும் தானாக முன்வந்திருப்பார்கள் என்றால் ஏன் நிர்ப்பந்தத்தின் வார்த்தையை பயன்படுத்தப்பட்டுள்ளது? உண்மை என்னவென்றால், இந்த இரண்டு விஷயங்களும் ஒரே நேரத்தில் செயல்பாட்டுக்கு வருகின்றன என்பதாகும். ஒரு குறிப்பிட்ட காலகட்டம் வரை இந்நிலைமைதான் திரு நபி (ஸல்) அவர்களின் காலத்தில் இருந்தன. எல்லா நபிமார்களின் காலகட்டங்களிலும் இவ்வாறே இருக்கும் என்பதே உண்மை. தீங்கிழைப்போர்கள் புரியும் தியாகமானது, தங்கள் விருப்பத்திற்கு எதிராக இருக்கும் அதே கணம் நம்பிக்கையாளர்கள் தங்கள் விருப்பத்துடன் தியாகங்கள் புரிகின்றன.

எனவே ஒரு நம்பிக்கையாளரின் தியாகத்தில் உள்ள அழகைக் குறித்து மற்றொருவருக்கு சொல்ல முடியாது. எதிரி அவரை பிடிக்கும்பொழுது அவர் முன் வேறு எந்த ஓர் வழியுமில்லை. அந்நிலையில் அவருக்கு வேறு எதுவும் செய்யமுடியாது. அதனால் அவரது தியாகத்தில் என்ன பிரகாசம் உள்ளன? இவ்வகையான எண்ணங்களுடன் உள்ள மக்களுக்கு முன் கு.ஃ.ப்ரின் (நம்பிக்கையின்மை) கதவு திறந்திருக்கிருக்கின்றன. நேர்மையான நம்பிக்கையாளர்களிடம் இது கூறப்படும்போது பாருங்கள்! நம்பிக்கையின்மையின் மற்றும் கு.ஃ.பரின் கதவு உங்களுக்காக திறந்திருக்கின்றது. நீங்கள் விரும்பினால், உங்களுக்கு இந்த கதவு வழியாக செல்லலாம். எனவே உங்கள் உயிர்கள், செல்வம், மற்றும் மரியாதை போன்றவற்றையை உங்களுக்கு காப்பாற்றிக் கொள்ளலாம். ஆனால் இத்தகைய நேர்மையான நம்பிக்கையாளர்களை பொறுத்தவரை அவர்கள் இந்த சலுகைகள் அனைத்தையும் நிராகரித்து, சுய விருப்பத்துடன் முன்வந்து மரணத்தை ஏற்றுக்கொள்கின்றனர்.

இதுபோல், 2001-ஆம் ஆண்டில் இறைவெளிப்பாட்டின் தொடக்கத்தில் பார்வோன் (இந்நூற்றாண்டின்) இலக்கிய ரீதியாக கூறினால் தலமைபார்வோன் அதாவது தீயவர்களின் வட்டத்தால் சூழப்பட்ட அக்காலத்தின் அஹ்மதியா கலீ.ஃ.பாவுக்கு தவறான அறிக்கைகளை அனுப்பினார்கள் அதாவது இந்த தாழ்மையான அடியானாகிய நான் அல்லாஹ்வின் புறமிருந்து வெளிப்பாடுகளைப் பெறுகிறேன். என்ற ஒரே காரணத்தால் நாங்கள் வெளியேற்றப்பட்டோம். அந்த புதிய யுகத்தில், ஈதுல் அத்ஹா திரு நாளன்று ஒரு பள்ளியை மூடுமாறு குழப்பக்காரர்களுக்கு கட்டளையிட்டனர். எனவே நம்பிக்கையாளர்களின் ஜமாஅத்து ஒன்றை உருவாக்குவதற்கு அல்லாஹ்விடமிருந்துள்ள கட்டளையை அந்நேரம் பெறாமலிருந்ததால் நாங்கள் மிக நீண்ட தூரம் பயணித்து மொரீஷியஸின் தெற்கே ஒரு பள்ளியில் ஜுமாவுக்கு சென்றோம். இது குழப்பகாரர்களிடம் மேலும் கோபத்தை ஏற்படுத்தியது. அவர்களிடம் மன்னிப்பு கேட்க, அதாவது எங்கள் உயிர், செல்லவம் மற்றும் மரியாதை ஆகியவற்றை காப்பாற்றுவதற்காக அவர்களின் கால்களுக்கு முன்பாக எங்களை மண்டியிட அவர்கள் விரும்பினார்கள். ஆனால் அவர்களின் அந்த தவறான எண்ணங்களை நாங்கள் நிராகரித்துவிட்டோம். அவர்களின் வலையில் நாங்கள் வீழ்ந்திருந்திருந்தால், அந்த நேரத்தில் இந்த தாழ்மையான அடியார் அல்லாஹ்வின் புறமிருந்து பெற்றுவரும் வெளிப்பாடுகள் பொய்யானவை என்றும் அதற்கு எந்த முக்கியத்துவமும் இல்லை என்றும் ஒப்புக்கொள்வதாக

இருந்திருக்கும் (அதிலிருந்து நாங்கள் அல்லாஹ்விடத்தில் அடைக்கலம் தேடுகிறோம்) மற்றொரு வார்த்தையால் கூறுவோமேயானால் அந்நிலையில் படைப்பாளனின் மீதான பயத்தைவிட படைப்பினங்கள் மீதான பயம் நம் இதயங்களில் அதிகமாக இருந்திருக்கும். அது ஒருபோதும் ஆககூடாது! அதைவிட தலையை வெட்டும் இயந்திரத்தில் என் தலையை நீட்டிக் கொடுப்பதே மிக சிறந்தது.

ஆகவே, நாங்கள் அவர்களுக்கு அடிபணிந்து விடுபவர்களல்ல என்பதை அந்த தீயவர்கள் உணர்ந்தனர். உங்கள் விருப்பப்படியே செய்யுங்கள்! ஆனால் ஈதுல் அத்ஹா தொழுகைக்காக மொரீஷியஸின் தெற்கு பகுதியிலுள்ள ஒரு பளளிவாசலுக்கு நாங்கள் சொல்கிறோம் என்ற செய்தி கிடைத்தபோது விரைந்து சென்று அந்த பள்ளியை நீங்கள் மூடினீர்கள் என்பதை என்னால் ஒருபோதும் மறக்க முடியாது. இந்த பள்ளிவாசல் அஹ்மதிகளால் சூழப்பட்டன. மேலும் அவர்களின் பார்வோன் இந்த மக்களுக்கு மிகவிரைவாக தங்கள் வீடுகளைவிட்டும், அவர்கள் வசிக்கும் அப்பகுதியை விட்டும், பள்ளியை விட்டும், வெளியேறுவதற்கும், மிக தொலை தூரம் பயணித்து பிரார்த்தனை நடத்தப்பட வேண்டிய மற்றொரு வட்டாரத்தில் சென்று தங்கள் ஈதுல் அத்ஹாவை கொண்டாடுவதற்கும் அறிவுறுத்தினார். அதாவது தங்கள் வீட்டு வாசல்களுக்கு முன்பாக இருந்த பள்ளிகளை விட்டு வெளியேறி, வெகு தொலைதூரம் பயணம் செய்ய அம்மக்கள் அறிவுறுத்தப்பட்டனர். அவர்கள் வெளியேற உத்தரவிடப்பட்ட அந்த மஸ்ஜிதானது ஆரம்பகாலத்தில் ஒரு குடும்பத்தால் நன்கொடையாக வழங்கப்பட்ட ஒரு பெரிய நிலமாகும். பல தியாகங்களுக்குப் பிறகு அவ்விடத்தில் ஒரு மஸ்ஜித் கட்டப்பட்டது. அது இந்த தெற்கு வட்டாரத்திற்கான மஸ்ஜிதாகவும், அஹ்மதியா பிரச்சார மையமாகவும் இருந்து வந்தன. ஆனால் அல்ஹம்துலில்லாஹ், அந்த நேரத்தில் இந்த மக்கள் அத்தகைய அறிவுறுத்தலில் அநீதியிருப்பதாக உணர்ந்தனர். ஒரு பள்ளியை மூடுவது மற்றும் வேறு இடங்களில் ஈதுல் அத்ஹ் தொழுகையைச் செய்ய நீண்ட தூரம் பயணம் செய்வது போன்றவை அநீநி என்று அவர்கள் கண்டனர். இதனால், அவர்கள் மீண்டும் ஒரு அஹ்மதியின் வீட்டில் ஒன்றிணைந்து தங்கள் ஈது தொழுகையைச் செய்தனர்.

எங்களைப் பொறுத்தவரை, நாங்கள் எங்களுடைய சொந்த ஏற்பாடுகளை செய்தோம். மேலும் எங்களுக்கு எதிராக அவர்கள் செய்த அநீதியை கண்ட இரண்டு குடும்பங்களும் பைலிஸில் உள்ள ஒரு வீட்டில் ஈது தொழுகைச் செய்ய

எங்களுடன் சேர்ந்து கொண்டனர். எங்களை பொறுத்தவரை, நாங்கள் படைப்பாளனுக்கு முன்னுரிமை வழங்கியிருந்ததனால், எண்ணற்ற சதி, புறங்கூறுதல் மற்றும் துன்புறுத்தல்கள் இருந்த போதிலும் நாங்கள் தியாகத்திற்காக ஆயத்தமாகி சுய விருப்பத்துடன் முன்வந்தோம். எங்களுக்கு எதிராக மக்களிடம் வெறுப்பூட்டுவதற்காக அனைத்து அஹமதியா பள்ளிகளிலும் பிரசங்களிலும் எங்களுக்கு எதிராக அவர்கள் பேசிக்கொண்டனர். ஆனால் அவர்கள் பயன்படுத்திய அனைத்து சூழ்ச்சிகள் இருந்த போதிலும் நாங்கள் எங்கள் நிலைபாட்டில் உறுதியாக நின்று தியாகம் செய்தோம்.

எனவே அத்தியாகத்தை பலவந்தமான முறையில் செய்ய நாங்கள் ஆளாக்கப்பட்டோம் என்பதை மக்களுக்கு பார்க்க முடியும் ஆனால் இது உண்மையில் சொந்த விருப்பப்படியே செய்த ஒரு செயலாகும் அதாவது நன்மைக்கும் தீமைக்கும் இடையிலிருந்து எங்கள் பாதையை நாங்கள் தேர்ந்தெடுத்தோம். எங்களைப் பொறுத்தவரை, நாங்கள் படைப்பாளனுக்கே முன்னுரிமை அளித்தோம். இதனால் எல்லா வகையான புறங்கூறுதல் மற்றும் துன்புறுத்தல்கள் இருந்தபோதிலும் நாங்கள் தியாகத்திற்காக தானாகவே முன்வந்தோம். அந்த நேரத்தில், இது போன்ற அவர்களின் துன்புறுத்தல்கள், அழுத்தம் மற்றும் கோரிக்கைகளுக்கு நாங்கள் அடிபணிந்துவிடும் நிலை உருவாகியது ஆனால் என்ன நிகழ்ந்தும் நாங்கள் இவர்களுக்கு அடிபணியவில்லை. எங்களுடைய படைப்பாளனின் மீதான எங்கள் கீழ்படிதலை உடைக்க யாராலும் முடியவில்லை. அந்த தியாகங்களை நாங்கள் மிக்க மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டோம். இந்த தியாகத்தின் மூலம்தான் இன்று அல்லாஹ் “இந்த தாழ்மையான அடியானை நம்பிக்கையாளர்களின் ஒரு ஜமா அத்துடன் எழுப்பியுள்ளான்”.

இவ்வாறு இந்த தியாக உணர்வுகள் யாவும் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் சீடர்களாகிய சஹாபே கராமலிருந்துதான் ஆரம்பமாகியது. அல்லாஹ்வின் பாதையில் அவர்கள் தங்களை அதே வீரியத்துடன் அர்பித்தனர். அவர்கள் எல்லா நிலைகளிலும் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் தியாக மனநிலைக்கு உகுந்தவாறு மிக சிறந்த ஒளியாக திகழ்ந்தனர். ஹஸ்ரத் இஸ்மாயில் (அலை) அவர்களின் தியாகத்தை அவர்கள் புதிய வெளிச்சத்தில் வெளிப்படுத்திக்காட்டியதுடன் அதற்கு ஒரு நவீனமான வாழ்வியல் நடைமுறையை அளித்தனர். இவ்வாறு ஒருவரின் தியாகமானது. ஆயிரக்கணக்கான /

இலட்சக்கணக்கான மக்களின் தியாகமாக மாறியது. மேலும் இது எல்லா காலங்களிலும் தொடர்ந்து வரும் ஒரு தியாகமாக பரிணமித்துள்ளது. சஹாபாக்கள் கடந்து வந்த அத்தகைய தியாகங்களால் நிறைந்த ஒரு காலத்தில்தான் நாம் இன்று வாழ்ந்து வருகிறோம். ஆகவே ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களால் நமக்கு கற்பிக்கப்பட்ட அதே உறுதியுடன் ஹஸ்ரத் இப்ரஹீம் (அலை) மற்றும் இஸ்மாயீல் (அலை) அவர்கள் புரிந்த அத்தியாகங்களுக்கு புத்துயிர் வழங்கும் வகையில் நாம் நமது வாழ்கையினை அமைக்க வேண்டும். உண்மையில் நாம் இன்று அதே உறுதியுடன்தான் எழுப்பபட்டிருக்கிறோம். இது நிச்சயமாக அல்லாஹ்வின் மாபெரும் ஒரு அருளாகும். ஏனென்றால் நான் பார்த்தவரை, இது நம்மீது இறக்கப்பட்ட அதாவது ஜமா அத்துசஹீஹில் இஸ்லாமின் மீது இறக்கப்பட்ட அல்லாஹ்வின் அருள்தான் என புரிந்துக் கொள்ளலாம். இந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதும் நாம்தான் அல்ஹம்துலில்லாஹ்!

உலகெங்கிலும் உள்ள இந்த ஸாலிமீன்கள், எங்கள் உறுப்பினர்கள் காணப்படும் ஒவ்வொரு இடத்திலும் சென்று எங்கள் உறுப்பினர்களின் உள்ளத்ததை திசைதிருப்ப தங்களால் முடிந்த அனைத்தையும் செய்கின்றார்கள், இதனால் அவர்களும் அவர்களின் சிலையும் சொல்வதை ஏற்றுக்கொள்வதற்கும், அல்லாஹ் அவர்களுக்கு கற்பித்ததை நிராகரிப்பதற்கும்! இந்த மோசடி செய்பவர்கள் கூறுகின்றார்கள்: நீங்கள் இதைச் செய்தால் (இறை வெளிப்பாடான சரியான பாதையை விட்டு விடுங்கள்) நாங்கள் உங்களைத் தழுவுவோம், நாங்கள் உங்களுக்கு மாலை அணிவிப்போம், உங்களுக்காக விருந்துகளை ஏற்பாடு செய்வோம், உங்கள் நினைவாக கேக்குகளை விநியோகிப்போம்.

ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமை சார்ந்த எங்கள் சகோதர சகோதரிகளின் இதயங்களில் அச்சத்தை ஏற்படுத்திடவும் மேலும் உங்களை காப்பாற்ற எங்களைத் தவிர வேறுயாரும் வரமாட்டார்கள் என்று அவர்களை நம்பவைத்திடவும் இந்த தீயவர்கள் முயற்சித்து வருகின்றனர். மேலும் அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள். நாங்கள் உங்களுக்கு முன் இரண்டு பாதைகளை திறந்து வைக்கிறோம். நீங்கள் தானாகவே வந்துவிடுங்கள் அல்லது வற்புறுத்தலின் மூலம் எங்களிடம் வந்து விடுங்கள் எவ்வழி மூலமானாலும் சரி, நீங்கள் வரவேண்டும்.

ஆனால் அவர்களின் தீய திட்டங்கள் மற்றும் தயாரிப்பினை ஜமா அத்து சஹீஹில் இஸ்லாமின் உறுப்பினர்கள் நிராகரிப்பதை அவர்கள் கண்டபோது, அவர்கள், எங்கள் உறுப்பினர்களை நம்பவைப்பதற்கான செயல்களுடன் முன்வருகின்றனர். ஆனால் அவர்களுக்கு எந்த முக்கியத்துவமும் எங்கள் உறுப்பினர்கள் வழங்குவதில்லை மேலும் இந்த சாத்தான்கள் இவ்வாறு கூறுகின்றனர் நாம் அவர்களின் முன்பாக என்ன வைத்தும் அவர்கள் அதனை நிராகரிக்கின்றனர். அனைத்து தீய சதிகளும் வீணாகிவிட்டன.

இதைப் பற்றி பேசுகையில், நான் இது குறித்து ஒரு நிகழ்வை உங்களுடன் பகிர்ந்துக் கொள்கிறேன்.

ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமைச் சார்ந்த எங்கள் நம்பிக்கையாளராகிய ஒருவர் அஹ்மதிகளால் சூழப்பட்ட ஒரு கிராமத்தில் வசித்து வந்தார். இஹ்மதிகள் அவருக்கு தண்ணீர் கிடைக்காதபடி பிரச்சினைகளை உருவாக்கினர். அவர்கள் இவ்வாறு நடந்துகொண்டபோது அவர் பொறுமையை கடைபிடித்து, அவர்களின் இந்த தீய திட்டத்தால் அவதிப்பட்டார். அந்நிலையில் அவர் மற்று மதத்தவர்களிடமிருந்து தண்ணீர் பெற நீண்ட தூரம் நடந்து சென்றார். அவர் இத்தண்ணீரை மிகவும் சிரமத்துடன் சுமந்து வந்தார். அவருக்கு சிரமங்களை ஏற்படுதியவர்கள் அவரிடம் "நீங்கள் ஜமா அத்து சஹீஹில் இஸ்லாமை விட்டு வெளியேறி எங்களிடம் திரும்ப வந்தால் உங்களுக்க எல்லா வழிகளிலும் எங்கள் உதவி கிடைக்கும் ஆனால் நீங்கள் அங்கயே நிலைத்திருந்தால் தண்ணீர் கிடைக்காது" என்று கூறினார்கள். அவர் கூறினார் நீங்கள் விரும்பியதைச் செய்யுங்கள், நான் எனது நம்பிக்கையை கைவிட தயாராகயில்லை. உங்களுக்கு தெரியும் அவர் மிகவும் ஏழையான ஒருவர் ஆனாலும் எங்கியிருந்தாவது அவர் சற்று பணத்தைப் பெற்றுக்கொண்டால் அப்பணத்தைக் கொண்டு வெளிக்கிழமை போருரைகளின் புகைப்பட நகல்களை எடுத்து அஹ்மதிகள் உட்பட அனைத்து மக்களுக்கும் அவர் வினியோகிப்பார் அவர் தனது தாவா வேலையை இவ்வாறான முறையில் செய்கிறார். தனக்கு தீங்கு செய்ய முயற்சிக்கும் இத்தகைய மக்கள் மத்தியில் அவர் தனியாக வாழ்ந்து வருகிறார். எனவே, அவர் ஒரு நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீரைப் பெற்று வந்தார், மேலும் அவ்விடதிலிருந்து அவர் தண்ணீரைப் பெறுவதை தடுக்க அவர்கள் சதிதிட்டங்கள் செய்யப்பட்ட போது, மற்றவர்கள் அவருக்கு உதவினார்கள். அல்லாஹ்வின் அருளால், இப்போது அவரது வீட்டிற்கு நேரடியாக

தண்ணீர் வரும் வகையில் அல்லாஹ் தனது பாதையைக் திறந்துவிட்டான். அதாவது குடிநீர் குழாய் இணைப்பிலிருந்து அவரது வீட்டிற்கு நேரடியாக தண்ணீர் கிடைக்கிறது. மேலும் அவருக்கு தீங்கு விளைவிக்கவும், அவர் தண்ணீரைப் பெறுவதைத் தடுக்கவும் முயன்ற அஹ்மதிகளின் நீர்த்தேக்கம் வரண்டு போனது. அல்ஹம்துலில்லாஹ் நமது சகோதரர் இப்போது அமைதியாக தனது வீட்டிலிருந்தே நேரடியாக தண்ணீரைப் பெற்று வருகிறார். அவருக்கு இனி தடைசெய்யப்பட்ட நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் தேவையில்லை. நீர்த்தேக்கம் வரண்டு போனதும் மக்கள், குறிப்பாக அஹ்மதிகளுக்கு தண்ணீர் கிடைக்காததும் தெரிந்த அவர் தனது வீட்டைவீட்டு வெளியே வந்து அதைக்குறித்து விசாரித்தார். பின்னர் அவர் அஹமதிகளிடம் கூறினார். தண்ணீர் பெற என் ஜமாஅத்தை ஏற்றுக்கொள்ளத் தேவையில்லை, நீங்கள் இங்கே வந்து தண்ணீர் எடுத்துக் கொள்ளுங்கள், என அவர் தனது வீட்டிலிருந்து தண்ணீரை பெற அவர்களை அழைத்தார்.

நீங்கள் பாருங்கள் இஸ்லாமிய சகோதரரான உங்கள் சக குடிமகனுக்கு நீங்கள் தீங்கு செய்ய முயற்சிக்கும் போது, மற்றவர்களுக்காக நீங்கள் ஒரு குழியினை தோண்டும் போது, அல்லாஹ் உங்களை அதே குழியில் வீழச் செய்கிறான். நம்மைப்பொறுத்தவரை நாம் உறுதியுடன் இருக்க வேண்டும், அவர்களைப் போலவே நாம் நம்மைத் தாழ்த்திக் கொள்ளக்கூடாது. மனித நேயத்தின் மீது அதிக அக்கறை கொண்டவர்களாக இருப்பதை நாம் அவர்களுக்கு காட்டவேண்டும். நம்பிக்கை கொண்டவர்களின் இந்த ஜமா அத்தில் நாம் இருப்பதால், இவ்வகையான தர்பித் நமக்கு அவசியமானதாகும்.

எனவே ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் உறுப்பினர்கள், அவர்கிளன் சூழ்ச்சிகள் / செயல்கள் / சதிகளால் தளர்ந்துவிடவில்லை. மாறாக அவர்கள் தங்களின் முடிவில் உறுதியுடன் இருக்கின்றனர். அவர்கள் நேர்மையாக இருப்பவர்கள்தான். அவர்களின் உறுதியான இந்த தீர்மானமானது தங்கள் நலனகாகவே அமையும். இந்த நூற்றாண்டில் அல்லாஹ் அவர்களுக்கு உதவுவதோடு, அவர்களின் நம்பிக்கையில் அவர்களை வலுப்படுத்தவும் செய்வான். மேலும் அல்லாஹ் தனது சொந்த கலீ:.பாவாக எழும்ப செய்து ருஹில் குத்துஸுடன் அனுப்பிவைத்துள்ள அவனது பணிவான இந்த அடியாரை அவர்கள் ஏற்றுக்கொண்டனர்

**எனவே ஜமாஅத்துச் சஹீஹில் இஸ்லாமின் உறுப்பினர்கள் அவர்களிடம் திரும்பி செல்லாததாலும் அவர்களின் சிலைகளுக்கு தங்களை இணைக்க**

**ஆசைப்படாததாலும் தீயவர்கள் ஆத்திரத்தில் கொதித்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களின் திட்டங்கள் அனைத்தும் வீணாகின்றன. மேலும் ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் உறுப்பினர்கள் தங்கள் தலையை முன்னோக்கி வைத்தவாறு கூறுகின்றனர். எங்கள் தலையை வெட்ட நீங்கள் விரும்பினால் நாங்கள் தயாராக இருக்கிறோம் ஆனால் இறை வெளிப்பாட்டின் மீதான எங்கள் நம்பிக்கையையும், இந்த நூற்றாண்டில் அல்லாஹ்வின் பணிவான ஊழியரின் மீதான எங்கள் நம்பிக்கையையும் நாங்கள் கைவிடமாட்டோம். இது உண்மையிலேயே விசுவாசிகளைக்கொண்ட ஜமா அத்தின் நம்பிக்கையாகும். ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமைச் சார்ந்த மூம்மினீன்கள் கூறுகின்றனர். "எங்கள் இறவைா நாங்கள் மகிழ்ச்சியுடனும் உற்சாகத்துடனும் நாங்களாகவே முன்வந்துள்ளோம்.**

எனவே அல்லாஹ்வின் அருளால், தேசிய மற்றும் சர்வதேசிய அளவில் மற்றும் ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் நிலையை உங்களுக்கு காண முடியும். புனித காபாவுக்கு அருகிலுள்ள ஒரு பாலைவனத்தில் 4000 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு குர்பானி (இரத்ததியாகம்) நடந்தது. இந்த தியாகத்தை அல்லாஹ் எவ்வாறு பாதுகாத்துவருகிறான் என்பதையும், அதை எவ்வாறு அவன் முன்னேறச் செய்து வருகிறான் என்பதையும் பாருங்கள். ஒரு தியாகம் ஆயிரக்கணக்கான தீயாகங்களாக மாறியது மட்டுமல்லாமல், இந்த தியாகத்தின் ஒவ்வொரு அம்சமும் மகத்தான வகையில் ஒளிர்கிறது.

பாலைவனத்தின் ஒவ்வொரு மணல் தூகள்களும் வானத்தில் நட்சத்திரங்களாக மாறின. ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) கூறிய அதே மாதிரியான உவமையில் தான். என் தோழர்கள் எப்படி நட்சத்திரங்களாக மாறிவிட்டார்கள் என்று பாருங்கள். அவர்கள் இனி நீங்கள் நசுக்கப்பயன்படுத்திய மணல் துகள்களோ, சூடான மணலில் நீங்கள் இழுக்கப்பயன்படுத்தியவர்களோ அல்ல. இப்போது அவர்கள் அடைந்துள்ளகட்டத்தைப் பற்றி உங்களுக்கு கற்பனை செய்யக் கூட முடியாது. அல்லாஹ் அவர்களுக்கு எங்கே வழிகாட்டியிருக்கின்றான். என்று பாருங்கள். என் தோழர்கள் எப்படி நட்சத்திரங்களாக மாறிவிட்டார்கள் என்று பாருங்கள். அத்தகைய நட்சத்திரங்கள் எப்போதும் உங்களுக்கு வழிகாட்டும்.

இது, திருக் குர்- ஆன் நமக்குப் புரியவைத்த ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்களின் தியாகங்களின் உச்சக்கட்டமாகும். மேலும் இந்த அத்தியாயம் எவ்வளவு அற்புதமாக மீண்டும் திறக்கப்பட்டுள்ளது என்பதைப்

பாருங்கள். அது புத்துயிர் பெற்று, உலக அளவில் இன்றும் நடைமுறையில் உள்ளது. இத்தகைய தியாகங்கள் புரிய தயாராகாமல் இருக்கும் மக்கள் எவ்விடவுமில்லை. எல்லா இடங்களிலும் இத்தகையவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் கூறுகிறார்கள். **"லப்பய்கல்லாஹ்ஹீம்ம லப்பய்க்" "எங்கள் இறைவா இத்தியாகம் புரிய நாங்கள் தயாராக இருக்கிறோம்."**

எனவே, இது ஈதின் தியாகமாகும். மேலும் இந்த ஈத்தின் மகிழ்ச்சியானது, இந்த தியாகங்களுடன் ஆழமாக இணைக்கப்பட்டிருகின்றது. இந்த ஈது தத்துவத்தை நீங்கள் ஆழமாக எப்பொழுது புரிந்துக்கொள்வீர்களோ, அப்பொழுதுதான் அதன் அனைத்து தியாகங்களுக்கும் நீங்கள் முழுமையாக தயாராக இருப்பீர்கள் மேலும் அந்நிலையில் தான் உங்கள் தியாகங்கள் அல்லாஹ்வின் அருளால் ஏற்றுக் கொள்ளப்படும். இல்லையெனில் இரத்தமும், இறைச்சியும் கொண்டுள்ள பலியிடுதல் அல்லாஹ்வுக்கு தேவையில்லை. இந்த இரத்தத்தின் விளைவாகவும் இறைச்சி தியாகத்தின் விளைவாகவும் உங்கள் இதயத்தில் உருவாகும் தக்வாவை தான் அல்லாஹ் பார்க்கின்றான். அத்தகைய தக்வா என்பது அல்லாஹ்வின் நினைவுகளால் இதயத்தை நிரப்பும். இந்த தக்வாதான் உங்களுக்குள் வளர வேண்டும். இத்தகைய நிலையை அடையும் பொழுது தான் உங்கள் தியாகங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் அல்லாஹ்வின் மீதான இந்த எண்ணத்தையும் நம்பிக்கையும் வைத்திருப்பதை நான் விரும்புகிறோன். இந்த புதிய நூற்றாண்டின் செய்தியை நமது தியாகங்களால் மாற்ற அவன் தௌபீக் வழங்குவனாக! இன்று நீங்கள் மனித குலத்தை பார்க்கும்போது (ஆன்மீக உயிரோட்டமுள்ள) இரத்தம் வெளியேற்றப்பட்ட ஒரு முகத்தை உங்களுக்கு காண முடியும். நீங்கள் அந்த முகங்களை கீறினால் அதிலிருந்து (ஆன்மீக உயிரோட்டமான) இரத்தம் வெளியேறாது. உயிரற்ற சடலமாக அவர்கள் எல்லா இடங்களிலும் நடமாடுகின்றனர். ஆன்மாக்களை இழந்தவர்களைபோல் அவர்கள் ஆகிவிட்டனர். இரத்த புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களின் முகத்தைப் பாருங்கள், அதே போன்றே இன்று மனித குலத்தின் முகங்கள் இருப்பதாக நீங்கள் காண்பீர்கள். ஆன்மீகம் இல்லாத மனிதகுலம். இறந்தவர்களை போன்று நடக்கின்ற அத்தகைய மக்களின் உள்ளத்தை உங்கள் தியாகங்களின் இரத்தத்தால் நிரப்ப வேண்டும். அத்தியாகத்தின் உணர்வை நீங்கள் அவர்களின் உள்ளங்களில் ஊத வேண்டும். அவர்கள் மூலம் தான், அந்த இறந்தவர்களை மீண்டும் உயிர்பிக்க முடியும்.

மேலும் சொற்களால் மட்டும் இவ்வளவு உயரிய ஒரு புரட்சியை ஏற்படுத்த முடியாது.

அல்ஹம்துலில்லாஹ், இன்று சர்வதேச அளவில் அவர்கள் புரிந்த தியாகங்களின் மூலம் ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமை இந்நூற்றாண்டின் நம்பிக்கை கொண்டோர்கள் மற்றும் நீதிமான்களின் அமைப்பாக அல்லாஹ் தேர்தெடுத்திருக்கின்றான். நாங்கள் மீண்டும் மீண்டும் அல்லாஹ்வுக்கு நன்றி கூறுகிறோம். உலகில் ஒரு ஜமா அத்து இருக்கின்றது யென்றால், அது ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமாகவேயிருக்கும். இந்த ஜமா அத்தானது, ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களுடன் இணைந்திருப்பதுடன். பெயர் தாங்கிய முல்லாக்களால் தவறாகப் பயன்படுத்தப்பட்டு, தவறாக செயல்படுத்தப்பட்ட இஸ்லாத்தின் உண்மையான போதனைகளுக்கு இது புத்துயிர் வழங்குகிறது. இந்த உலகம் முழுவதற்கும் உயிரைக் கொடுப்பதற்கான வழிமுறையாக உங்களின் இத்தகைய தியாகங்களை பயன்படுத்தலாம். இன்ஷா அல்லாஹ்.

ஆகவே இத்தியாகத்தை நீங்கள் சரியான முறையில் புரிந்தால், அதன் தத்துவும் எவ்வாறு அமைந்துள்ளது என்று பாருங்கள். இந்த விலங்குகளின் இறைச்சியோ இரத்தமே ஒருபோதும் அல்லாஹ்வை அடைவதில்லை உங்கள் தக்வாதான் அவனை அடைகிறது. இந்த தக்வாவை அல்லாஹ் எப்பொழுதும் நமக்கு வழங்கி, பராமரிப்பதற்காக நான் பிரார்த்தனை செய்கிறேன். ஆமீன், சும்ம ஆமீன் யாரப்பல் ஆலமீன்

**“ஈது முபாரக்”**

Translated by:

*Naib Amir* ***Azim Ahmad***


**Editing & Publishing are done by**
***AMIR***
***JAMAAT - UL-SAHIH-AL-ISLAM***
***TAMIL NADU***
**Ph No: 917502272774**